**அக்டோபர் – 23**

# TNPSC துளிகள்

- ❖ IUCN அமைப்பின் உறுப்பினர் நாடுகள் ஆனது, இந்திய வனவிலங்கு வளங்காப்பு நிபுணர் விவேக் மேனனை IUCN இனங்களின் உயிர் பிழைத்தல் ஆணையத்தின் (SSC) 2025 முதல் 2029 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்திற்கான புதிய தலைவராகத் தேர்ந்தெடுத்துள்ளன.
- ❖ 50 சுற்றுலாத் தலங்களை உலகளாவிய தரநிலைகளில் மேம்படுத்துவதற்கான தேசிய முன்னெடுப்பின் கீழ், நாகாலாந்து அரசானது மாநிலத்தின் அதிகாரப்பூர்வப் பரிந்துரையாக ட்சுகோ பள்ளத்தாக்கினை முன்மொழிந்துள்ளது.
- ❖ சண்டிகரில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு இந்திய சர்வதேச அறிவியல் விழாவிற்கான (IISF) தொடக்க விழாவினை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் மத்திய இணை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- ❖ ஐதராபாத் மலையேறும் வீரர் பரத் தம்மினேனி, மலையேறுவதற்கான அணுகல் உள்ள ஒன்பது 8,000 மீட்டர் சிகரங்களையும் ஏறிய முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- ❖ ஆளில்லா வான்வழி அமைப்புகள் (UAS) அல்லது ஆளில்லா விமானங்கள் மூலமாக வரும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக முக்கியமான உள்கட்டமைப்பு மற்றும் முக்கிய இலக்குகளை அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்க ஐரோப்பிய ஒன்றியமும் (EU) இந்தியாவும் முதன்முறையாக தீவிரவாத எதிர்ப்புப் பயிற்சியை நடத்தின.
- ❖ தருண் கார்க் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் (HMIL) நிறுவனத்தின் முதல் இந்திய நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக பதவியேற்க உள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 2023–24 ஆம் ஆண்டில் மானியங்கள் உயர்வு




- ❖ 2019–20 ஆம் ஆண்டில் 20,114 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாடு அரசு வழங்கும்

மானியங்கள் 2023–24 ஆம் ஆண்டில் 37,749 கோடி ரூபாயாக அதிகரித்தன.

- கலைஞர் மகளிர் உரிமைத் தொகை (KMUT) திட்டம் தொடங்கப்பட்டதன் காரணமாக மானியங்களில் வருடாந்திர வளர்ச்சி விகிதம் சுமார் 27% ஆக இருந்தது.
- மானியங்கள் ஆனது, வருவாய் வரவுகளில் ஒரு பங்காக ஐந்து ஆண்டுகளில் 11.54 சதவீதத்திலிருந்து 14.27% ஆக உயர்ந்தன.
- மானியங்கள் ஆனது வருவாய் செலவினத்தின் ஒரு பங்காக அதே காலக் கட்டத்தில் 9.57% சதவீதத்திலிருந்து 12.19% ஆக அதிகரித்தன.
- உறுதியளிக்கப்படாத செலவினங்களில் மானியங்களின் பங்கு 35.12 சதவீதத்திலிருந்து 38.91% ஆக அதிகரித்துள்ளது.
- வெளிப்படையான மானியங்களில் KMUT, PDS, மானிய விலையில் வீட்டு மின்சாரம், பெண்களுக்கான இலவச பேருந்துப் பயணம் மற்றும் மாணவர் கட்டணச் சலுகைகள் ஆகியவை அடங்கும்.
- இலவச மிதிவண்டிகள் மற்றும் மானிய விலையில் விதைகள் போன்ற மறைமுக மானியங்கள் 2023–24 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கு 801.77 கோடி ரூபாய் செலவை ஏற்படுத்தின.

# தேசியச் செய்திகள்

## இடதுசாரி தீவிரவாதத்தில் வீழ்ச்சி 2025




- 6 ஆக இருந்த இடதுசாரி தீவிரவாதத்தால் (LWE) அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கையானது தற்போது சத்தீஸ்கரில் உள்ள பிஜாப்பூர், சுக்மா மற்றும் நாராயண்பூரில் மட்டும் என 3 ஆகக் குறைந்துள்ளது.
- இந்தியா முழுவதும் 18 ஆக இருந்த LWE பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆகக் குறைந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில், பொதுச் செயலாளர் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

(மாவோயிஸ்ட்) 8 மூத்த தலைவர்கள் உட்பட 312 இடதுசாரிப் போராளிகள் நீக்கப் பட்டனர்.

- 2013 ஆம் ஆண்டில், 126 மாவட்டங்களில் இடதுசாரி வன்முறைகள் பதிவாகின என்ற நிலையில் இது 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் வெறும் 18 மாவட்டங்களாகக் குறைந்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் இடதுசாரி தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

## டெல்லி- NCR பகுதியில் பசுமைப் பட்டாசுகளின் பயன்பாடு




- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் தேதியன்று, டெல்லி மற்றும் தேசிய தலைநகர் பிராந்தியத்தில் (NCR) ஒழுங்குபடுத்தப்பட்ட நிபந்தனைகளின் கீழ் சான்றளிக்கப்பட்ட பசுமைப் பட்டாசுகளை விற்பனை செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உச்ச நீதிமன்றம் அனுமதித்தது.
- நாக்பூரின் NEERI (தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம்) முத்திரை மற்றும் ஸ்கேனர் குறியீட்டைக் கொண்ட பட்டாசுகள் மட்டுமே விற்பனை மற்றும் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட்டன.
- பொது சுகாதாரம் மற்றும் பாரம்பரியத்தைச் சமநிலைப்படுத்தும் ஒரு மாற்றத்தைக் குறிக்கும் வகையில், 2018 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் முழு தடையை மாற்றி அமைத்த உத்தரவைத் தொடர்ந்து பசுமைப் பட்டாசுகளை மீண்டும் அறிமுகப் படுத்தி உள்ளது.
- வழக்கமான பட்டாசுகளுடன் ஒப்பிடும் போது பசுமைப் பட்டாசுகள் மூன்றில் இரண்டு பங்கு உமிழ்வைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதைத் தவிர அவை உமிழ்வுகளற்ற வெடிப் பொருட்கள் அல்ல.
- NEERI நிறுவனத்தினால் மூன்று வகையான பசுமைப் பட்டாசுகள் உருவாக்கப் பட்டு

உள்ளன, அவை

- SWAS (பாதுகாப்பான நீர் வெளியிடக்கூடிய பட்டாசுகள்),
- STAR (பாதுகாப்பான தெர்மைட் பட்டாசு), மற்றும்
- SAFAL (பாதுகாப்பான குறைந்தபட்ச அலுமினியம் கொண்டவை).

## இந்தியாவில் உணவுப் பாதுகாப்பு 2025




- பால் மற்றும் சிறு தானியங்கள் உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளது என்ற நிலையில் பழங்கள், காய்கறிகள் மற்றும் மீன் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் அரிசி ஊட்டச்சத்து செறிவூட்டல் திட்டம் (செறிவூட்டப்பட்ட அரிசியில், ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராட இரும்பு, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் B12 ஆகியவை சேர்க்கப்படும்) ஆனது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மத்திய திட்டங்களின் கீழ் நிறைவு செய்யப்பட்டது.
- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 ஆனது, 78 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு மானிய விலையில் உணவு தானியங்களை வழங்குகிறது.
- இலவச உணவு தானியங்களை உறுதி செய்வதற்காக பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா [PMGKAY] 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது.

## SITAA முன்னெடுப்பு

- இந்திய தனித்துவமான அடையாள ஆணையம் (UIDAI) ஆனது, ஆதார் உடன் புதுமை மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பிற்கான திட்டத்தை (SITAA- Scheme for Innovation and Technology Association with Aadhaar) அறிமுகப்படுத்தியது.
- டிஜிட்டல் அடையாள கண்டறிதல் சூழல் அமைப்பில் புதுமை, உள்நாட்டுமயமாக்கல் மற்றும் கூட்டு வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப்

படுகிறது.

❖ பாதுகாப்பான மற்றும் மேம்படுத்தக்கூடிய அடையாள தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்காக UIDAI உடன் ஒத்துழைப்பினை மேற்கொள்வதற்காக புத்தொழில்கள், கல்வியாளர்கள் மற்றும் தொழில்துறையை SITAA ஊக்குவிக்கிறது.

❖ SITAA முன்னெடுப்பின் மூலோபாய பங்குதாரர்களாக MeitY புத்தொழில் நிறுவன மையம் மற்றும் NASSCOM ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.

❖ இந்தத் திட்டமானது உயிரியளவியல்/பயோமெட்ரிக் சாதனங்கள், அங்கீகார கட்டமைப்புகள், தரவுத் தனியுரிமை, செயற்கை நுண்ணறிவு மற்றும் பாதுகாப்பான அடையாளக் கண்டறிதல் செயலிகளில் கவனம் செலுத்துகிறது.




# சர்வதேசச் செய்திகள்

## உருகுவேயில் கருணைக்கொலை சட்டம்





❖ கருணைக்கொலையைச் சட்டப்பூர்வமாக்குவதற்கான சட்டத்தை உருகுவே நாடானது

நிறைவேற்றியதன் மூலம் அவ்வாறு செய்த முதல் கத்தோலிக்க இலத்தீன் அமெரிக்க நாடாக அது மாறியுள்ளது.

- இறுதி கட்ட நோயறிதல் அல்லது காத்திருப்பு காலம் தேவையில்லாமல் தாங்க முடியாத வலியை ஏற்படுத்தும் குணப்படுத்த முடியாத நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை கருணைக் கொலை செய்ய இந்தச் சட்டம் அனுமதிக்கிறது.
- கருணைக் கொலையானது சுகாதார நல நிபுணர்களால் செய்யப்பட வேண்டும் என்ற நிலையில் மேலும் நோயாளிகள் அதற்கேற்ற மனத் திடம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதோடு இது இரண்டு மருத்துவர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- நோயாளிகள் தாங்களாகவே ஆபத்தான மருந்துகளை உட்கொள்ளும் உதவியுடன் கூடிய தற்கொலை, இந்தச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படாது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## டைம் ரோண்டோ படிகம்





- அறிவியலாளர்கள் டைம் ரோண்டோ படிகம் (TRC) எனப்படும் ஒரு புதிய வடிவினைக் கண்டறிந்துள்ளனர்.
- திடப்பொருள்கள் அல்லது திரவங்களைப் போலல்லாமல், TRCகள் இட ரீதியாக அல்லாமல் நேர ரீதியாக வரிசையைக் காட்டுகின்றன.
- டைம் படிகங்கள் சரியான சீரலைவு இயக்கத்தைக் காட்டுகின்றன, அதே நேரத்தில் TRCகள் நீண்ட கால வரிசையை குறுகிய கால சீரற்ற தன்மையுடன் இணைக்கின்றன.
- கட்டமைக்கப்பட்ட சீரற்றத் தன்மையுடன் நுண்ணலை அலைவு/துடிப்புகளால் கட்டுப்படுத்தப் படும் வைரத்தில் கார்பன்-13 அணுக்கருக்களின் சுழல்களைப்

பயன்படுத்தி TRC உருவாக்கப்பட்டது.

- இந்தப் புதிய கட்டம் பல வினாடிகள் நீடிக்கும் மற்றும் இந்த கட்டமைப்பு வெப்பமடையும் போது மங்கிவிடும், இது சிறிய நிலைப்பாட்டினைக் (மெட்டாஸ்டபிலிட்டி) காட்டுகிறது.

## இஸ்ரோவின் எதிர்காலத் திட்டங்கள்





- 2040 ஆம் ஆண்டிற்குள் இந்திய விண்வெளி வீரர்களை நிலவில் தரையிறக்க இஸ்ரோ இலக்கு நிர்ணயித்துள்ளது.
- ககன்யான் திட்டத்தின் கீழ் முதல் மனித விண்வெளிப் பயணம் ஆனது 2027 ஆம் ஆண்டு திட்டமிடப் பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் எந்திர மனிதன் வ்யோமித்ராவுடன் கூடிய வீரர்கள் குழுவினர் கொண்ட பயணத்திற்கு முன்னதாக மூன்று வீரர்கள் அற்ற ககன்யான் விண்வெளிப் பயணங்கள் மேற்கொள்ளப்படும்.
- இந்தியா 2035 ஆம் ஆண்டிற்குள் தனது சொந்த விண்வெளி நிலையமான பாரதிய அந்தரிக்சா நிலையத்தை அமைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது.
- வெள்ளி, செவ்வாய், சந்திரயான்-4 மற்றும் சந்திரயான்-5 ஆகியவற்றுக்கான ஏவுதல்களுக்கு இஸ்ரோ ஒப்புதல் பெற்றுள்ளது.
- SPADEX திட்டம் மூலம் விண்வெளியில் வெற்றிகரமாக விண்கல இணைப்பு மற்றும் விலக்கல்களை மேற்கொண்ட 4வது நாடாக இந்தியா ஆனது.
- 2025 ஆம் ஆண்டில் GSLV F15/NVS-02 (புவி ஒத்திசைவு செயற்கைக்கோள் ஏவு வாகனம் F15/ வழிசெலுத்தல் செயற்கைக்கோள்-02) கலத்தினை ஏவியதன் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ISRO தனது 100வது ஏவுதலை நிறைவு செய்தது.

## கதிர்வீச்சு எதிர்ப்பு மருந்து

- சீசியம்-137 மாசுபாட்டை குணப்படுத்துவதற்காக இந்தியா இந்தோனேசியாவிற்கு பிரஷ்யன் ப்ளூ மருந்துகளைப் பரிசளித்தது.

- இந்தோனேசியாவின் சுகாதார அமைச்சகத்தின் அவசர கோரிக்கையின் பேரில் இந்த மருந்துகள் அனுப்பப்பட்டன.
- ஜகார்த்தாவில் உள்ள இந்தியத் தூதரகம் மருந்துகளின் விரைவான போக்குவரத்திற்கு உதவியது.
- அணுசக்தி அல்லது கதிரியக்க அவசரநிலைகளுக்கு இந்தோனேசியாவின் எதிர் நடவடிக்கைக்கு இந்த உதவி துணைபுரிகிறது.
- சீசியம்-137 என்பது உடனடியாக சிகிச்சையளிக்கப் படாவிட்டால் கடுமையான உடல்நல அபாயங்களை ஏற்படுத்துகின்ற ஒரு கதிரியக்க ஐசோடோப்பாகும்.
- பிரஷ்யன் ப்ளூ கதிரியக்க சீசியம்-137 ஐசோடோப்பினை உடலில் பிணைத்து அதை அகற்ற உதவுகிறது.





## சுற்றுச்சூழல் செய்திகள்

### 2024 – இது வரை பதிவு செய்யப்பட்ட வெப்பமான ஆண்டு

- உலக வானிலை அமைப்பு ஆனது, 21வது வருடாந்திர பசுமை இல்ல வாயு உமிழ்வு அறிக்கையை வெளியிட்டது.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய சராசரி வெப்பநிலையானது 1850–1900 ஆம் ஆண்டில் இருந்த அடிப்படை அளவை விட அதிகமாக 1.55 டிகிரி செல்சியஸை எட்டியது.
- 1957 ஆம் ஆண்டில் நவீனப் பதிவுகள் தொடங்கியதிலிருந்து மிக விரைவான வருடாந்திர $CO_2$ உயர்வு இதுவாகும்.
- இந்தியாவில் நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை தற்போது புதைபடிவமற்ற மூலங்களிலிருந்து பெறப்படுகின்றன.
- இந்தியா உலகளாவிய உமிழ்வுகளில் 7% பங்களிக்கிறது என்றாலும் உலக மக்கள் தொகையில் 18 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

- ஆரம்பகட்ட வெப்பமடைதலின் சுற்றுக்கள் ஆனது சுற்றுச்சூழல் அமைப்புகளை மீள முடியாத மீள் எழுச்சி நிலைகளைக் கடந்து தள்ளக்கூடும் என்று இந்த அறிக்கை எச்சரிக்கிறது.
- COP30 மாநாட்டிற்கு முன் அனைத்து நாடுகளும் உமிழ்வை விரைவாகக் குறைக்க வேண்டும் என்று WMO (உலக வானிலை அமைப்பு) வலியுறுத்தியது.
- 1.5 டிகிரி இலக்கை அடைய 2030 ஆம் ஆண்டில் 45 சதவீத $CO_2$ குறைப்பு தேவை என்று அறிவியலாளர்கள் மதிப்பிடுகின்றனர்.




## லகோசெயிலஸ் ஹயாவோமியாசாகி




- மகாராஷ்டிராவின் கோலாப்பூர் மாவட்டத்தின் பகுதியளவு பசுமையான திலாரி காட்டில் லகோசெயிலஸ் ஹயாவோமியாசாகி என்ற புதிய இழைகள் கொண்ட நத்தை இனம் கண்டறியப்பட்டது.
- இயற்கை கருப்பொருள் கொண்ட படங்களுக்கு புகழ் பெற்ற ஜப்பானிய இயங்குபடக் கலைஞரான ஹயாவோ மியாசாகியைக் கௌரவிக்கும் விதமாக இந்த இனத்திற்கு

இப்பெயர் சூட்டப்பட்டது.

- இது வடக்கு மேற்குத் தொடர்ச்சி மலையில் லகோசெயிலஸ் இனத்தின் முதல் பதிவு ஆகும்.
- தற்போது அதன் அறியப்பட்ட பரவல் எல்லை ஆனது இந்தியத் தீபகற்பத்தில் 540 கிலோ மீட்டர் வடக்கு நோக்கி விரிவாகியுள்ளது.

### ஆறு புதிய தும்பி இனங்கள்





- கேரளாவின் அமைதிப் பள்ளத்தாக்கு தேசியப் பூங்காவில் 83 தும்பி இனங்கள் பதிவு செய்யப் பட்டன.
- ஆறு புதிய இனங்கள் சேர்க்கப்பட்டதுடன் பூங்காவில் உள்ள தும்பிகளின் எண்ணிக்கை 103 இலிருந்து 109 இனங்களாக அதிகரித்தன.
- நீண்ட கால்கள் கொண்ட கிளப்டெயில் (மெரோகோம்பஸ் லாங்கிஸ்டிக்மா), ஃப்ரேசரின் டோரண்ட் ஹாக் (மேக்ரோமியா இராட்டா), டார்க் டாகர்ஹெட் (மேக்ரோமிடியா டொனால்டி), நீல-கழுத்து கொண்ட ரீட் டெயில் (புரோட்டோஸ்டிக்டா மோர்டோனி), வயநாடு டோரண்ட் டார்ட் (யூஃபேயா வயனாடென்சிஸ்), மற்றும் கருப்பு மற்றும் மஞ்சள் பாம்பூடெயில் (எலட்டநியூரா டெட்ரிகா) ஆகிய இனங்கள் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ளன.
- யூஃபேயா இனத்தைச் சேர்ந்த மூன்று இனங்கள் சிறந்த நன்னீர் தரத்தைக் குறிக்கின்றன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலகளாவிய நிதி மையங்களின் குறியீடு 2025

- குஜராத் சர்வதேச நிதித் தொழில்நுட்ப நகரம் (GIFT நகரம்) ஆனது 38வது உலகளாவிய நிதி மையங்களின் குறியீட்டில் (GFCI 38-2025) 3 இடங்கள் முன்னேறி 43வது இடத்தைப் பிடித்தது.

- ❖ ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் முதல் 15 இடங்களில் உள்ள ஒரே இந்திய நிதி மையமாக GIFT நகரம் உள்ளது.
- ❖ இந்தத் தரவரிசையில் நியூயார்க் நகரம் (அமெரிக்கா) முன்னணியில் உள்ளது, அதைத் தொடர்ந்து இலண்டன் (ஐக்கியப் பேரரசு) மற்றும் ஹாங்காங் (சீனா) இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் உள்ளன.




## மாநிலச் சுரங்கத் தயார்நிலைக் குறியீடு 2025





- ❖ இந்தியாவின் முதல் மாநிலச் சுரங்கத் தயார்நிலைக் குறியீட்டை (SMRI 2025) சுரங்க அமைச்சகம் வெளியிட்டது.
- ❖ மாநிலச் சுரங்கத் தயார்நிலைக் குறியீடு (SMRI) ஆனது நிலக்கரி அல்லாத கனிமங்களை மையமாகக் கொண்டு சுரங்கச் சீர்திருத்தங்களில் இந்திய மாநிலங்களை தரநிலைப்படுத்தியுள்ளது.
- ❖ இது ஏலச் செயல்திறன், ஆரம்பகால சுரங்கச் செயல்பாடு, ஆய்வு உந்துதல் மற்றும் நிலையான சுரங்க நடைமுறைகள் குறித்து மாநிலங்களை மதிப்பிடுகிறது.
- ❖ நியாயமான ஒப்பீட்டிற்காக மாநிலங்கள் கனிம வளம், மிதமான நிதியுதவி மற்றும் குறைந்த நிதியுதவி குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- இந்தக் குறியீடு சுரங்கத் துறையில் வெளிப்படைத்தன்மை, செயல்திறன், நிலையான சுரங்கம் மற்றும் கூட்டுறவு கூட்டாட்சியை ஊக்குவிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டில் சிறந்த மாநிலங்களில் கனிம வளம் கொண்ட பிரிவில் மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகியவை அடங்கும்.
- கோவா, உத்தரப் பிரதேசம் மற்றும் அசாம் மிதமான வளப் பிரிவில் முன்னிலை வகிக்கின்றன அதே நேரத்தில் பஞ்சாப், உத்தரக்காண்ட் மற்றும் திரிபுரா குறைந்த நிதியுதவி குழுவில் முதலிடத்தில் உள்ளன.

# மாநிலச் செய்திகள்


## திரிநேத்ரா திட்டம்




- மகாராஷ்டிராவில் உள்ள அகோலா காவல்துறை செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி மீண்டும் மீண்டும் நிகழும் குற்றங்களைத் தடுக்க திரிநேத்ரா திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- திரிநேத்ரா என்பது அடுத்தக் குற்ற மதிப்பீடு மற்றும் தந்திரோபாய வள ஒதுக்கீட்டிற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆபத்து தொடர்பான தகவல்களைக் குறிக்கிறது.
- தண்டனை வகை, குற்ற முறைகள் மற்றும் இருப்பிடத் தரவுகளின் அடிப்படையில் மீண்டும் மீண்டும் குற்றமிழைக்கும் குற்றவாளிகளின் ஆபத்து மதிப்பெண்களை ஒதுக்க இந்த அமைப்பு இயந்திரக் கற்றலைப் பயன்படுத்துகிறது.
- ஒரு நிகழ்நேர முகப்புப் பக்கமானது காவல் நிலையம், பிரிவு மற்றும் பிராந்திய மட்டங்களில் கவனம் செலுத்தும் ரோந்துப் பணிகளுக்கு ஆபத்து குறித்த காட்சிப் படுத்தலை வழங்குகிறது.
- இந்தத் திட்டத்தில் சாதி, மதம் அல்லது புவியியல் அடிப்படையில் விவரக் குறிப்பைத் தவிர்க்கும் நெறிமுறைப் பாதுகாப்புகள் உள்ளன.
- மனிதத் தீர்ப்பினை மையமாகக் கொண்டு, AI கணிப்புகள் வழிகாட்டுதலாக உள்ளன, ஆனால் அவை காவல்துறை முடிவுகளை மாற்றுவதில்லை.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## ரைலா அமோலோ ஒடிங்கா மறைவு




- முன்னாள் கென்ய பிரதமர் ரைலா அமோலோ ஒடிங்கா இந்தியாவின் கேரளாவில் அவரது 80 வது வயதில் காலமானார்.
- அவர் 2008 முதல் 2013 ஆம் ஆண்டு வரை கென்யாவின் பிரதமராகப் பணியாற்றினார்.
- ஒடிங்கா ஐந்து முறை கென்யாவின் அதிபர் பதவிக்கு போட்டியிட்டார் ஆனால் ஒரு போதும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை.
- தேர்தலுக்குப் பிந்தைய வன்முறையை முடிவுக்குக் கொண்டு வந்த 2007 ஆம் ஆண்டு அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்தில் ஒடிங்கா முக்கியப் பங்கு வகித்தார்.
- அவர் கென்ய நாடாளுமன்றத்தில் 15 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக பணி ஆற்றினார்.

## FAO உலகளாவிய விருது

- இயற்கை சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்கு சங்கத்தின் சுந்தரவன மீன் வளர்ப்பு மாதிரி ஆனது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) உலகளாவிய விருதை வென்றது.
- இந்த மாதிரியானது, குளங்களில் 5% முதல் 30% வரையிலான சதுப்புநிலப் பகுதியை உள்ளடக்கிய சதுப்புநிலத்துடன் இணைக்கப்பட்ட இறால் வளர்ப்பை ஊக்குவிக்கிறது.
- இது வடக்கு மற்றும் தெற்கு 24 பர்கானா மாவட்டங்களில் 29.84 ஹெக்டேர் பரப்பளவில் 42 மீன் வளர்ப்பு விவசாயிகளை உள்ளடக்கிய வகையில் செயல்படுத்தப்பட்டது.
- குறைக்கப்பட்ட உற்பத்தி செலவுகள் காரணமாக விவசாயிகளின் வருடாந்திர சராசரி நிகர இலாபம் 100 சதவீதத்திற்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- இத்தாலியின் ரோமில் நடைபெற்ற FAO அமைப்பின் 80வது ஆண்டு விழாவின் போது இந்த விருது வழங்கப்பட்டது.




## தேசிய எரிசக்தி வளங்காப்பு விருதுகள் 2025

- மின் அமைச்சகத்தின் கீழ் உள்ள எரிசக்தி திறன் வாரியம் (BEE) ஆனது, 35வது தேசிய எரிசக்தி வளங்காப்பு விருதுகளுக்கான (NECA-2025) விண்ணப்பங்களை அழைத்து உள்ளது.
- தொழில்துறைகள், கட்டிடங்கள், போக்குவரத்து மற்றும் நிறுவனங்கள் முழுவதும் எரிசக்தி திறன் மற்றும் வளங்காப்பிற்கான சிறந்தப் பங்களிப்புகளை NECA அங்கீகரிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டு விருதுகள் ஆனது டிஜிட்டல் உள்ளடக்க படைப்பாளர்கள் மற்றும் எரிசக்தி வளங்காப்பு விழிப்புணர்வை ஊக்குவிக்கும் சமூக ஊடக செல்வாக்கு செலுத்துபவர்களுக்கென ஒரு புதிய பிரிவினை அறிமுகப்படுத்துகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★